செ.வெ.எண் : 11/ஜூலை நாள் : 05.07.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## ரூ.1.65 கோடி மதிப்பில் முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப் பணிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் இன்று (05.07.2017) மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வளாச்சித் துறையின் சார்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியம், நல்லுகுறிச்சி கிராமத்தில் பாரத பிரதமரின் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.1,70,000/- மதிப்பீட்டில் பயனாளிகளுக்கு புதிதாக கட்டப்பட்டு வரும் வீடுகளின் கட்டுமானப் பணிகளையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதித் திட்டத்தின் கீழ் ரூ.5,00,000/- மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணியாளர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் கருப்பணசாமி கோவில் ஊரணி ஆழப்படுத்தும் பணிகளையும் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் கழிவு மற்றும் குப்பைகளை தரம் பிரித்து மறு சுழற்சி செய்து ஆக்கப்பூர்வமான முறையில் பயன்படுத்திட ஏதுவாக ரூ.50,000/- மதிப்பில் குப்பைகள் தரம் பிரிக்கும் கூடம் அமைக்கப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்பு கீழக்கொடுமலூர் கிராமத்தில இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் ஏழை மக்கள் சொந்தமாக வீடு கட்டி பயன்பெறுகின்ற வகையில் 35 பயனாளிகளுக்கு தலா ரூ.1,70,000/- மதிப்பில் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளையும், ரூ.1.5 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள பண்ணைக் குட்டையினையும், தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.12,000/- மதிப்பில் கட்டப்பட்டுள்ள தனிநபர் இல்லக் கழிப்பறையினையும் பார்வையிட்டார்.

பின்பு விக்கிரபாண்டியபுரம் மற்றும் மகிண்டி கிராமங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதித் திட்டத்தின் கீழ் ரூ.5,00,000/- மதிப்பீட்டில் பொதுமக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்திடும் வகையில் ஊரணி ஆழப்படுத்தப்பட்டு வரும் பணிகளையும், மகிண்டி மற்றும் சிறுகுடி ஆகிய கிராமங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயன் பெறும் வகையில் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பில் மண்புழு உரம் தயாரிக்கும் கூடம் அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும் ஆய்வு செய்தார்.

அதன் பின்பு வளநாடு கிராமத்தில் தமிழ்நாடு கிராமசாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.85.40 இலட்சம் மதிப்பில் செங்கர்படை சாலை முதல் புஷ்பவனம் வரையிலான தார்சாலையினை மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளைப் பார்வையிட்டு, பணிகளை துரிதமாக மேற்கொண்டு விரைந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வர உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது முதுகுளத்தூர் வட்டாரவளர்ச்சி திரு.ராதாகிருஷ்ணன், ஊரக வளர்ச்சி துறை உதவி செயற்பொறியாளர்கள் திரு.கே.பாபு, திரு.அழகேசன் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**